TAMIL N... MADRAS-600 009
31 MAY 1985

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 11, சனிக்கிழமை.

பங்குனி 28, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."

குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

1. வினாக்கள்-விடைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 380 முதல் 385 முடிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியனில் புதிய தொழிற்சாலை.

386—(*வினா எண் 1668) **திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், ராசக்காபட்டி கிராமம், தீத்தாம்பட்டி, கல்லுப்பட்டி ஆகிய பகுதிகளில் தொழிற்சாலை ஏதேனும் நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளில் தொழிற்சாலை நிறுவுவதற்கான திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.